தமிழ்நாடுபள்ளிக்கல்விஇயக்குநரின்செயல்முறைகள், சென்னை-06

ந.க. எண்:19528/எம்1/இ1/2024, நாள்: 15.10.2024

பொருள்: பள்ளிக்கல்வி – மாணவர்களின் பண்பாடு மற்றும் ஒழுக்கத்தினை மேம்படுத்துதல் – உலகப் பொதுமறை திருக்குறளை அடிப்படையாகக் கொண்ட நன்னெறி கல்விப் பாடத்திட்டம்- மாணவர்களுக்கு உரியபயிற்சி வழங்கி செயல்படுத்திடஅறிவுரைவழங்குதல் – சார்பாக.

பார்வை: அரசுகடிதஎண்efile 8634/ERT/2024-1, dated.11.09.2024.

-----

பார்வையில் காணும் அரசு கடிதத்தில் திருக்குறளை நாள் தோறும் வழிபாட்டு கூட்டத்தில் பொருளுடன் கூறவேண்டும். திருக்குறள் சார்ந்த சிறுகதைகளை ஆசிரியர் கூட்டத்தில் மாணவர்களுக்கு எடுத்துக் கூறுதல் வேண்டும். சென்னை மாநகர காவல்துறையினரால் "குறள்வழி போதை விழிப்புணர்வு சிறுகதைகள்" என்ற தொகுப்பு வெளியிடப்பட்டுள்ளது. பார்வையில் காண் கடித நகல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது

| .வ.எண் | வாரம் | கதை |
|---|---|---|
| 1 | வாரம்1 | மனமயக்கம் |
| 2 | வாரம்2 | போதைவலையில்வீரா |
| 3 | வாரம்3 | தடம்மாறியபாதை |
| 4 | வாரம்4 | ஆசிரியரின்பரிவு |
| 5 | வாரம்5 | நட்பினால் நன்மை /நன்மை தரும் தீமை |
| 6 | வாரம்6 | சட்டத்தின்சாட்டை |
| 7 | வாரம்7 | பெற்றோரின்அன்பு |
| 8 | வாரம்8 | மருத்துவஉதவி |
| 9 | வாரம்9 | முயற்சிதிருவினையாக்கும் |

மேற்கண்ட சிறுகதைகளை தவறாது வாரம் தோறும் தமிழாசிரியர் மட்டும் அல்லாமல் அனைத்து வகுப்பு பொறுப்பு ஆசிரியர்களும் வகுப்பறையில் மாணவர்கள் இக்கதைகள் கூறவும் அதை சார்ந்த எழுத்து மற்றும் ஓவிய வடிவங்களில் தெரிந்து கொண்டவற்றை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பாக ANTI DRUG CLUB செயல்பாடாக மன்றங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பாடவேளையில் மற்றும் சிறப்பு செயல்பாடாகவும் செயல்படுத்தி சிறப்பான கட்டுரைகள் மற்றும் ஓவியங்களை தேர்வு செய்து பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் சான்றிதழ்கள் வழங்கலாம். தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பள்ளி அளவில் 14/11/2024 அன்று சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டும்.

மேலும் இச்செயல்கள் செயல்படுத்தப்படுவதை பள்ளித் தலைமை ஆசிரியர்கள் உறுதி செய்திட வேண்டும் பள்ளிப்பார்வை மற்றும் ஆண்டாய்வின் போது செயல்பாடுகளை ஆய்வு செய்திடவும் அனைத்து அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகின்றது.

இணைப்பு : கதை தொகுப்பு

இயக்குநர்

பெறுநர்

1. முதன்மைக்கல்விஅலுவலர்கள்
   அனைத்துமாவட்டங்கள்.
2. மாவட்டக்கல்விஅலுவலர்கள்
   (இடைநிலை, தொடக்கக்கல்வி, தனியார்பள்ளிகள்
   (முதன்மை கல்வி அலுவலர்கள் மூலமாக)

நகல்

அரசுச்செயலர்,

பள்ளிக்கல்வித்துறை,

தலைமைச்செயலகம்,

சென்னை-09

(தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது)

# குறள்வழி போதை விழிப்புணர்வு சிறுகதை

## மாணவர் - ஆசிரியர் - பெற்றோர் கவனத்திற்கு



தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால். (திருக்குறள். 209)

தனது நலத்தை விரும்புகிறவன்,
பிறர் நலத்தை கருத்தில் கொண்டு வாழ்பவன்,
தீய செயல்களின் பக்கம் சிறிதளவுகூட நெருங்கலாகாது.



**சென்னை பெருநகர காவல்**

# முன்னுரை

போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்களின் பழக்கம் மக்களிடம் பரவி வருவதால், தமிழக அரசும் நமது சென்னை பெருநகர காவல் துறையும் இணைந்து அதைத் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. போதைப் பொருட்களைத் தயாரித்தல், பயன்படுத்துதல், கடத்துதல் போன்ற சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கும் குற்றங்களை ஒழிக்க போதைப் பொருட்களைத் 'தடுத்தல், அழித்தல், ஒழித்தல்' போன்ற கடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இப்போதைப் பழக்கத்திற்கு எவ்வாறு அடிமையாகிறார்கள், என்னென்ன செயல்கள் போதையில் விழுவதற்கு தூண்டுகின்றன என்பதையும், போதைப் பொருள்கள் மற்றும் அதன் பழக்கத்தால் நிகழும் பல்வேறு கேடுகளைப் பற்றியும் மக்களுக்கு விளக்க விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடத்துவதன் மூலமும், தொழில்நுட்ப உதவிகளுடன் அத்தகைய குற்றங்களை தடுப்பதிலும் முழு உத்வேகத்துடன் காவல் துறையினர் கடமையாற்றி வருகின்றனர்.

சமூகத்திற்கும், தனிநபர் வாழ்விற்கும் மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருக்கும் போதைப் பொருளின் மாய வலையில் சிக்காமல் இருக்க அறிவுரைகள், இப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டவரிடம் காணப்படும் அறிகுறிகள், இத்தருணத்தில் அவரவர் பொறுப்பை உணர்ந்து இப்பழக்கத்தில் இருந்து மீட்டெடுக்கும் நல்ல வழிமுறைகளையும் இங்கு மாணவர்களுக்கு ஏற்றவாறு ஒரு எளிமையான வண்ணப்படச் சித்திரக்கதை மூலம் விளக்கியுள்ளோம். போதைப் பொருள்கள் மற்றும் போதைப் பழக்கம் இல்லாத நல்ல சமுதாயத்தை உருவாக்குவதே தமிழ்நாடு அரசு மற்றும் சென்னை பெருநகர காவல்துறையின் நோக்கமாகும். போதைப்பொருட்கள் பற்றிய விழிப்புணர்வு பள்ளியில் இருந்தே தொடங்கும் முயற்சியின் முதற்கட்ட நடவடிக்கையாக 'மாணவர், ஆசிரியர், பள்ளி நிர்வாகம், பெற்றோர் மற்றும் சமூகத்திற்கு கொண்டு சேர்க்க இந்த விழிப்புணர்வு சித்திரக்கதை ஒரு நல்ல கருவியாக பயன் உள்ளதாக இருக்கும் என்று நம்புகிறோம்.

# அணிந்துரை

## அன்புள்ள குழந்தைகளே !

சென்னை பெருநகர காவல்துறை, அனைத்து மக்களுக்கும், குறிப்பாக, குழந்தைகளுக்கு பாதுகாப்பான சமூகத்தை உருவாக்க அயராது பாடுபடுகிறது. போதை பொருள் பழக்கம் மற்றும் அதன் பயன்பாடு நமது நல்வாழ்விற்கும், ஆரோக்கியத்திற்கும் மிகப்பெரிய அச்சுறுத்தலை உண்டாக்குகிறது.

போதைப் பொருட்களை ஒழிப்பதிலும், அதன் பயன்பாட்டைத் தடுப்பதிலும் பொது மக்களின் பங்களிப்பு மிகவும் அவசியமானது.

எனவே, போதைப் பொருள் பழக்கத்தால் ஏற்படும் ஆபத்துகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், போதைப் பழக்கத்தால் பாதிக்கப்பட்டால், காவல்துறையின் உதவியை நாட ஊக்குவிக்கும் வகையிலும் போதைப் பொருட்களுக்கு எதிரான பல தீவிர நடவடிக்கைகள் மற்றும் பிரச்சாரங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

போதைப் பொருள் பயன்பாட்டிற்கு எதிரான சென்னை பெருநகர காவல் துறையின் விழிப்புணர்வு முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்த சிறுகதை புத்தகம் இருக்கும். இந்த சிறுகதை மூலம் கூறப்படும் வழிமுறைகளை உங்கள் அன்றாட வாழ்வில் பொருத்திப் பார்த்து சிந்தித்துச் செயல்பட வேண்டும்.
போதை இல்லா வாழ்க்கைக்கு நாங்கள் அமைக்கும் இந்தப் புதிய பாதையில் பயணிக்க நீங்களும் எங்களோடு கைகோர்த்திடுங்கள்! பலன் பெறுங்கள்! வாழ்த்துக்கள்!

குழந்தை செல்வங்களே! இந்த சிறுகதை மூலம் சென்னை பெருநகர காவல் துறையின் போதைப்பொருள் எதிர்ப்பு பிரச்சாரத்தில் நீங்கள் முழு மனதோடு இணைவீர்கள் என நம்புகிறேன்.

**காவல் ஆணையர்**
**சென்னை பெருநகர காவல்**

# 1. மன மயக்கம்

வீரா, மாறா மற்றும் கமலி மூவரும் குழந்தை பருவத்தில் இருந்தே நெருங்கிய நண்பர்கள். தற்போது மூவரும் ஒரே பள்ளியில் 9-ஆம் வகுப்பு படித்து வருகிறார்கள். வீரா பள்ளியில் இருந்து மாலை 4 மணிக்கு வீடு திரும்பும் போது மாறாவிடம் "இன்னைக்கு சாயங்காலம் நானும் என் அம்மா அப்பாவும் படத்துக்கு போறோம். ஜாலியா இருக்கும்!" என்றான்.

2 நாட்கள் கழித்து விடுமுறையின் சோம்பல், படம் பார்த்த உற்சாகம், படத்தில் ஹீரோ செய்த சாகசங்களைத் தன் நண்பர்களிடம் சொல்லும் ஆர்வம் என எல்லாம் சேர்ந்து விடிந்தது வீராவின் திங்கட்கிழமை. காலை 8 மணிக்கு மிகவும் பரபரப்பாக பள்ளிக்கு கிளம்பிக் கொண்டிருந்தான் வீரா. இரவெல்லாம் படத்தைப் பற்றியே சிந்தித்து தூங்காமல் தாமதமாக எழுந்ததால் காலையில் அவசர அவசரமாகப் புத்தகங்களை பையில் எடுத்து வைத்துக்கொண்டே தன் அம்மாவிடம் லஞ்ச் பாக்சை வாங்கி கொண்டு கிளம்பினான்.



வீரா வீட்டை விட்டு வெளியே வந்ததும் எதிரே மாறாவும் கமலியும் தனக்காக காத்திருப்பதைக் கண்டுகொண்டான். சந்தோஷத்தில் "ஹேய் இதோ வந்துட்டேன். வாங்க போலாம். டைம் ஆயிடுச்சு..." என்று பலமாகக் கத்தினான். "ஏன்டா வீரா இவ்ளோ லேட்டா வர... உனக்காக எவ்ளோ நேரமா இங்க நிக்கிறேன் தெரியுமா? ஏன் இரண்டு நாளா டியூஷனுக்குக் கூட நீ வரல?" என்று அக்கறையாக அவனிடம் கேட்டாள் கமலி. மாறனும் 'ஏன்டா வரல ?' என விசாரித்தான்.

"அது ஒன்னும் இல்ல... நான் சினிமாப் படத்துக்கு போனேன்ல... அதுல வர ஹீரோ ரொம்ப மாஸ். உனக்குத் தெரியுமா?. அவரு ஸ்டைலா சிகரெட் பிடிச்சாரு! எனக்கும் அவர மாதிரி சிகரெட் பிடிக்கணும்னு ரொம்ப ரொம்ப ஆசையா இருந்தது. ஆனா எனக்கு சிகரெட்ட எங்க வாங்குறது, எப்படி வாங்குறதுனு தெரியல... அதான் நேத்து பூரா டியூஷன் போறேன்னு சொல்லிட்டு சிகரெட் வாங்க போனேன். ஹீரோ மாதிரி ஸ்டைலா சிகரெட் புகை விட நாமளும் ட்ரை பண்ணலாமா?!" என்றான் வீரா.



"நான் வரல டா, அது நல்லதுக்கு இல்ல. நீயும் பண்ணாத" என்றான் மாறா. "ஆமா வீரா. அதெல்லாம் தப்பு. நீ அதெல்லாம் பண்ண வேணாம். இன்னைக்காவது ஒழுங்கா டியூஷனுக்கு வா" என்றாள் கமலி. வீராவுக்கு கோபம்.

"நீங்க ரெண்டு பெரும் வரலைனா, என்ன ? போங்க... நான் இன்னைக்கு சாயங்காலமா ஸ்கூல் முடிச்சிட்டு போகும்போது, சிகரெட் வாங்க ட்ரை பண்ணப் போறேன்." என்று சொல்ல மூவரும் சரியாக பள்ளியை அடைந்திருந்தனர்.

வகுப்பறைக்குச் சென்ற பின்னும் வீராவின் நினைவெல்லாம் தான் கண்ட சினிமா காட்சியிலேயே இருந்தது. வீட்டுப்பாடமும் முடிக்கவில்லை; சரியாகப் பாடங்களை கவனிக்காமல் இருந்ததால் பள்ளியில் ஆசிரியர்களிடம் திட்டு வாங்கினான்.

வீரா தன் நெருங்கிய நண்பர்கள் அவனின் விபரீத சிகரெட் ஆசைக்கு உதவ மாட்டார்கள் என்று அறிந்த பின்னர் வேறு யாரிடம் உதவி கேட்கலாம்? என்று யோசிக்கத் தொடங்கினான்.



தனக்கு சிகரெட் வாங்கித் தர மற்றொரு நண்பன் பாமனிடம் உதவியைக் கேட்டுப் பார்க்கலாம் என்று நினைத்தபடி தன் கையில் கட்டியிருந்த கைக்கடிகாரத்தை பார்த்துக் கொண்டே வகுப்பில் அமர்ந்திருந்தான்.



நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு. (திருக்குறள் 784)

நட்பு என்பது ஒருவருடன் சிரித்துப் பேசுவது மட்டும் அன்று. நண்பர் தவறான பாதையில் போகும் போது அதனைக் கண்டிப்பதே நல்ல நட்பு.

எப்போதும் வீராவுடன் சிரித்து மகிழ்ந்து விளையாடும் மாறா மற்றும் கமலி இருவரும், வீரா தவறான பாதைக்கு செல்லும் போது அவன் செய்வது தவறு என்று வலியுறுத்துகிறார்கள். இதுவே நல்ல நண்பனின் பண்பாகும்.

# 2. போதை வலையில் வீரா



பள்ளி முடிந்ததும் தன் நண்பன் பரமனைச் சந்திக்க வேகவேகமாக புறப்பட்டான் வீரா. ஒரு வழியாக பரமனின் உதவியோடு சிகரெட் வாங்கி அதையும் புகைக்கக் கற்றுக்கொண்டான். தினமும் பள்ளியில் இருந்து நேராக வீட்டிற்குச் செல்லாமல், தன் நண்பன் பரமன் மூலம் அறிமுகமான போதைப் பொருள் வியாபாரி பாண்டியை சந்திக்கிறான். சிகரெட்களை வாங்கிச் செல்வதை அதன்பின் அன்றாட பழக்கமாகவே வைத்துக்கொண்டான், வீரா. இதே நிலைமை ஒரு மாதத்திற்கு தொடர்ந்தது. வீரா சிகரெட் குடிப்பது கமலிக்கு தெரிந்துவிட்டது.

கமலி வீராவை பார்த்த போதெல்லாம் "சொன்னா கேளுடா! ஏன்டா இப்படி இருக்க? யார் கிட்டையும் ஒழுங்கா பேச மாட்ற! எல்லார்க்கிட்டயும் எரிஞ்சி எரிஞ்சி விழுற!... இந்த மாதம் பரிட்சையில் கூட ஒழுங்காவே மார்க் வாங்கலடா.... என்னடா ஆச்சு உனக்கு? என்கிட்ட சொல்லுடா" என பரிவுடன் கமலி கேட்டுக்கொண்டே இருந்தாள். வீரா அதற்கெல்லாம் பதில் பேசவே இல்லை. உண்மையை மறைத்தான். "எனக்குத் தெரியும். நீ பரமன் கூட

சேர்ந்து நிறைய கெட்ட பழக்கங்களைக் கத்துகிட்ட. சிகரெட், கஞ்சா, குடிப்பழக்கம்னு, ஒரு மாசத்துலயே போதைப் பழக்கத்தால் உடம்பை கெடுத்துகிட்ட! இப்போவெல்லாம் தினமும் சாயங்காலம் எங்க கூடவும் வர்றதில்ல, ஒழுங்காவும் படிக்கவும் மாட்டேன்ற, இப்படி இருக்காதடா வீரா! உன் எதிர்காலம் பாழாகிடும்" என்று அக்கறையுடன் வீராவிற்கு அவன் வழிமாறி போவதை சுட்டிக்காட்டி மாறாவும் கண்டித்தான்.

இதை எல்லாம் யோசிக்க யோசிக்க, வீராவிற்கு எவ்வளவு முயன்றாலும் இரவுகளில் சரியாகத் தூங்க முடியவில்லை. போதையின் கெடுதல் பற்றி கமலியும் மாறாவும் பேசியது மனசுக்குள்ள ஓடிக்கொண்டே இருந்தது. ஆனாலும் அவனது மனம் மட்டும் "போதையை விடாதே!.. அதுதான் சொர்கத்தைக் காட்டுது. அந்த ஹீரோ மாதிரி நீயும் பெரிய ஆளா ஆகணும்னா, உன்னப் பாத்து எல்லாரும் பயப்படணும்னா... அதுக்கு இந்தப் போதை தான் உதவும்" என்று சொன்னது. வீராவுக்கு குழப்பமோ குழப்பம்! மறுநாள் காலை வீரா தான் சேமித்து வைத்திருந்த பணம் எல்லாம் செலவாகித் தீர்ந்துவிடவே யோசித்தான். "அம்மாவிடம் பணம் கேட்டால் ஏன் எதற்கு என்று பல காரணங்கள் கேட்பார். அப்பாவிடம் பணம் கேட்டால் அதற்கும் கணக்கு சொல்ல வேண்டும்! இப்போ பணம் இல்லாம நான் எப்படி சிகரெட்டும் கஞ்சாவும் வாங்க போறேன்னு தெரியலையே?" என்று தவித்தான். காலை பள்ளிக்கும் வழக்கம் போல தாமதமாகச் சென்றான்.



கையறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல். (திருக்குறள். 925)

விலை கொடுத்து போதை பொருளால் தன் உடம்பைத் தானே மயங்கச் செய்வது அறியாமை ஆகும்.


விலை கொடுத்து போதைப் பொருளை வீரா நாடினான். அவனின் இந்த செயல் மிகப்பெரிய அறியாமை. தான் செய்யும் இந்த இழி செயலால் தனக்கு நன்மை எதுவும் நிகழாது என்ற உண்மையை வீரா புரிந்துகொள்ள வேண்டும்.

# 3. தடம் மாறிய பாதை

அன்று காலை பள்ளியில் மாதந்தோறும் நடக்கும் உளவியல் ஆலோசனை வகுப்பு இருந்தது. இந்த வகுப்பில் மாணவர்கள் சிறப்பு ஆசிரியர் மாலா மிஸ் உடன் பேசி தங்கள் மனதில் எழும் எண்ணங்களையும், குழப்பங்களையும், ஆசைகளையும் பற்றி தயக்கமின்றி பேசி பயன்பெறலாம். வீராவிற்கும் மாலா மிஸ் ஏற்கனவே தெரிந்த மிஸ் தான்.

உட்கார்ந்திருந்த வீராவை பார்த்த மாலா மிஸ் "ஹாய் வீரா... எப்படி இருக்க? நல்லா படிக்கிறியா? எப்போவுமே முதல் பெஞ்சுல இருக்குற நீ இப்போ எதுக்காக லாஸ்ட் பெஞ்சுக்குப் போன?" என்று சந்தேகமாகக் கேட்டார். பின்பு வகுப்புக்கு வெளியே அழைத்து வந்து தனியாக விசாரித்தார்.
தான் போதைக்காக செய்த தவறை எண்ணி மனதில் குழப்பத்துடன் எதுவும் பேச விருப்பமில்லாமல், "நான் நல்லா தான் இருக்கேன்" என்று முகம் கொடுக்காமல் பதில் சொன்னான் வீரா.

"வீரா... என்னாச்சு? உடம்புக்கு ஏதும் சரி இல்லையா? ஏன் ஒரு மாதிரியா இருக்க? நான் உங்கிட்ட ஒரு ப்ரெண்ட் போல தானே பேசுறேன்... உன் பெஸ்ட்



ப்ரெண்ட் மாறா கூட சண்டை போட்டாயா? எதுவா இருந்தாலும் என்கிட்ட தயங்காம சொல்லு" என்று பதிலுக்கு அக்கறையுடன் கேட்டார் மாலா மிஸ். மாலா மிஸ் மீது அவன் வைத்திருந்த அன்பும் நம்பிக்கையும் தனக்கு நிகழ்ந்ததை அவரிடம் சொல்லிவிடலாம் என அவனை யோசிக்க வைத்தது. "மிஸ்... நான் ஒரு உண்மை சொல்லுவேன். அது சரியானு எனக்கு தெரியல. ஆனா சிகரெட் இல்லாம என்னால இருக்கவே முடியல..." என்று அழுதுகொண்டே நடந்ததைச் சொல்ல ஆரம்பித்தான் வீரா.

ஏதோ தவறு நடந்துள்ளது என்பதை உணர்ந்த மாலா மிஸ், வீராவை அருகில் அழைத்து அவனை தைரியப்படுத்தி தன்னம்பிக்கையும் கொடுத்தார், நடந்ததை தெளிவாக, எதையும் மறைக்காமல் கூறும்படி கேட்டுக்கொண்டார். "கடந்த ஒரு மாதத்தில் நான் எப்படி இப்படி போதைக்கு மாறினேன் என்று எனக்கே தெரியவில்லை. என்னால சுத்தமா சரியாப் படிக்க முடியல. பாடத்துல கவனம் செலுத்த முடியல. இந்த போதைப் பழக்கம் மட்டும் பிடித்திருக்கிறது. யாரும் என்னை கேள்வி கேக்குறது எனக்கு பிடிக்கல. நான் யாருக்கும் பதில் சொல்ல விரும்பல. என்ன நிம்மதியா இருக்க விடுங்க. நான் இப்படியே இருக்கேன்" என்று தன் மனதில் உள்ளதை எல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துச் சொன்னான் வீரா.

நடந்ததை எல்லாம் பொறுமையாகக் கேட்டுக்கொண்ட மாலா மிஸ், வீராவை வேறு எதுவும் சொல்லித் திட்டாமல், மதிய உணவு இடைவேளையில் மீண்டும் தன்னை வந்து பார்க்கச் சொல்லி அனுப்பி வைத்தார்.

சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல். (திருக்குறள். 445)



தக்க வழிகளை ஆராய்ந்து கூறும் அறிஞர்களையே உலகம் பின்பற்றும். மன்னராக இருப்பினும் அத்தகையோரை ஆராய்ந்து நட்பு கொள்ள வேண்டும்.

நெருக்கடியான காலங்களில் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று ஆராய்ந்து கூறும் அறிஞரையே உலகம் பாராட்டும். வீராவின் அடுத்தகட்ட செயல்களிலும் அவன் எதிர்காலத்தையும் கவனத்தில் கொண்டு போதைப் பழக்கத்தில் இருந்து மீள வழி சொல்லும் மாலா மிஸ்ஸை அனைவரும் போற்றிக் கொண்டாடுவார்கள்.

# 4. ஆசிரியரின் பரிவு

மதிய உணவு இடை வேளை மணி அடித்தது. "டேய் வீரா மாலா மிஸ்ஸை பாக்க போகலையா?" என்று நினைவு படுத்தினாள் கமலி. தயங்கி தயங்கி ஒருவழியாக குழப்பத்துடன் மாலா மிஸ்ஸை சந்திக்கப் புறப்பட்டான் வீரா. மாலா மிஸ் அறைக்கு சென்றதும் "ஹேய் வீரா...! வெரி குட். சொன்ன மாதிரியே வந்துடீங்க... உன்ன தான் எதிர்பார்த்துட்டே இருந்தேன். உங்கிட்ட பேசுனதுல இருந்து நீ தெரிஞ்சோ தெரியாமலோ போதைக்கு அடிமை ஆகிட்ட இப்போ அதுல இருந்து வெளிய வர வழி தெரியாம முழிச்சிகிட்டு இருக்க. சரிதானே?" என்று மாலா மிஸ் கேட்டார்.

"ஆமா மிஸ்... எனக்கு சில நேரம் என்மேல எனக்கே கோபம் கோவமா வரும். அப்போ எல்லாம் என்ன பண்றதுனே எனக்குப் புரியாது" என்றான் வீரா. "நீ கவலை படாதே... உன்ன பழைய வீராவா மாத்துறது எங்க எல்லாருடைய பொறுப்பும் கடமையும்" என்றார் மாலா மிஸ், நம்பிக்கையுடன். பின்னர் இப்போ நீயே 'பொறுமையா யோசி என்று சில விளக்கங்களை புரியும் படி சொன்னார். "நீதான் போதைப் பொருள் பயன்படுத்த முடிவு எடுத்த. அதே மாதிரி இப்போ நீதான் போதைப் பழக்கத்தில் இருந்து வெளிய வர்றதையும் தீர்மானிக்கணும்"



"அப்புறம் உன்னோட எதிர்கால வளர்ச்சியை இந்தப் பழக்கம் பாதிக்கும்னு நீ விடலாம்னு நினைக்கிற? அப்ப அதைத் தூக்கி போட்டுட்டு உன் பிரெண்ட்ஸ் கூட சேர்ந்து முன்ன மாதிரி நல்லாப் படிக்கலாமே! எதோ ஹீரோவ பாத்து இந்த கெட்ட பழக்கதிற்கு அடிமை ஆயிட்ட அந்த ஹீரோ செய்வது எந்தவகையிலும் நிஜமில்லை. எல்லாமே நடிப்பு தான். நீ நல்ல ஹீரோ ஆகணும்னா நல்ல வழியில தான் போகணும், நல்ல எண்ணங்களோடு எப்பவும் இருக்கணும், நல்ல செயல்கள் மட்டும் தான் செய்யணும்".

"உன் தப்பான முடிவோ செயலோ உன்ன மட்டும் பாதிக்கிறதில்ல வீரா, அது உன்னுடைய குடும்பம், நண்பர்கள், பள்ளிக்கூடம், சமுதாயம்னு பல வகையில் பாதிக்கும்". "நீ இந்த போதைப் பழக்கதுக்கு அடிமையானாலும் நீ ஆரம்ப நிலையில் தான் இருக்க. அது தீவிரமா ஆகாமப் பாத்துக்கணும். நீ நெனச்சா உன்னால முடியும் வீரா... என்று புரியும்படி மிஸ் சொன்னார்கள்.

"ஓகே மிஸ்..." என்று மெதுவாக தலையசைத்தான் வீரா. "மறுபடியும் சிகரெட், கஞ்சா மேல ஆச வந்தா, அது தப்புனு நீயே உனக்குச் சொல்லிக்கணும். உனக்கு பிடிச்ச புத்தகத்தை படிக்கனும், பிரெண்ட்ஸ் கூட விளையாடனும், வேற ஏதாவது உனக்கு பிடிச்ச நல்ல பொழுதுபோக்கு செயல்ல ஈடுபட்டு உன் கவனத்தை மறுபடியும் சிதறவிடாம பாத்துக்கணும்". "வீரா... செய்வியா?" என கேட்க. "நிச்சயமா மிஸ். நீங்க சொன்னதெல்லாம் நான் செய்ய ட்ரை பண்ணுவேன். தேங்க் யூ மிஸ்" என்று நன்றி சொல்லி புறப்பட்டான் வீரா. மாலாமிஸ் சொன்னதை எல்லாம் புரிந்து கொண்டே வீரா தன் வகுப்பறைக்குச் சென்றான்.



காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனின்ஊங்கு இல்லை உயிர்க்கு. (திருக்குறள் 122)

அடக்கத்தை செல்வமாக எண்ணிக்காக்க வேண்டும். அதைவிடப் பெரிய செல்வம் வேறு இல்லை.

போதை எண்ணங்களில் இருந்து தன்னை விலக்கி வைத்து தன் மனம், சொல், செயல் ஆகியவற்றை அடக்கி, கட்டுப்பாட்டுடன் வீரா வாழ வேண்டும். போதைப் பழக்கத்தில் இருந்து வெளிவரும் வழி இது தான்.

# 5. நட்பினால் நன்மை / நன்மை தரும் நட்பு

பள்ளி மாணவனான வீராவிற்கு போதைப் பொருட்களை வழங்கியவர் யார் என்று கண்டுபிடிக்க வேண்டும் என்று மாறாவிடம் விசாரித்தார் மாலா மிஸ். 'எல்லாம் அந்த பரமன் பண்ண வேலை தான் மிஸ். பாண்டினு ஒரு அண்ணாதான் இதெல்லாம் இங்க கொண்டு வந்து விக்குறதாச் சொல்லுவான். நாங்களும் அவனைப் பார்த்து இருக்கோம். அவன்கிட்ட இருந்து தான் தினமும் வீரா சிகரெட்டா வாங்கி வாங்கி இந்தப் பழக்கத்திற்கு அடிமையாகிட்டான்' என்று மாறா பதில் சொன்னான்.

"சமூக விரோதச் செயல் இது. போதைப் பொருள் விக்குறதே தப்பு. அதுல சின்னப் பசங்களுக்குக் கொண்டு வந்து தர்றது அதை விடப் பெரிய தப்பு. இதைத்தடுக்க நாம ஏதாவது செஞ்சே ஆகணும்." என்று மனவருத்தத்துடன் தன் ஆதங்கத்தைச் சொன்னார் மாலா மிஸ். பள்ளி முடிந்தது "நம்ப எல்லாரும்



சேர்ந்து ஒன்னா விளையாடி ரொம்ப நாள் ஆச்சுல்ல வீரா. ஒரே ஒரு மேட்ச் ஆடிட்டு வீட்டுக்கு போகலாமா?" என்று கூறிக்கொண்டே வீராவின் கைகளை கோர்த்துக்கொண்டு மாறாவும் கமலியும் விளையாட்டு மைதானம் நோக்கிப் புறப்பட்டனர்.

நெடுநாட்களுக்குப் பிறகு நண்பர்கள் சேர்ந்து விளையாடிவிட்டு மிகவும் மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினார்கள். வீடு திரும்பும் வழியில் உள்ள பேருந்து நிறுத்தத்தில் சென்னை பெருநகரக் காவல் துறையின் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கை சம்பந்தப்பட்ட போஸ்டர் இருப்பதை கவனித்தான் மாறா. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் போன ஆகஸ்ட் மாதம் நடைமுறைக்கு வந்த "போதையில்லா தமிழ்நாடு" திட்டம் பற்றியது அது. அவர்கள் அனைவரும் பள்ளியில் உறுதிமொழி ஏற்றது நினைவிற்கு வந்தது. அந்த நிகழ்ச்சியில் போதைப் பொருள் தொடர்பாக புகார்களைப் பதிவுசெய்ய 10581 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணை அழைக்கக் கூறியதும் மாறாவின் நினைவிற்கு வந்தது.



"இதோ பாரு கமலி... இது அந்த போதைப் பொருள் விழிப்புணர்வு நிகழ்ச்சியில சொன்ன இலவச நம்பர் தானே. நம்ம பாண்டி பத்தி இந்த நம்பர்ல கம்ப்ளைன்ட் பண்ணலாம்." என்று ஐடியா சொன்னான் மாறு.

இதைப் பற்றி யோசித்துக்கொண்டே வீடு வந்த கமலி அம்மாவிடம் நடந்ததைக் கூறினாள். "அம்மா நான் 10581 எனும் டோல்ப்ரீ நம்பருக்குக் கால் பண்ணி கம்ப்ளைன்ட் பண்ணிடலாமா? என்றாள் கமலி. அம்மா அவளிடம், "சரி... உனக்கு நல்லா தெரிஞ்சா நீ கால் பண்ணி உங்க ஸ்கூல் பக்கம் நடக்குற போதைப் பொருள் வியாபாரம் பத்திச் சொல்லு. நாம எடுக்குற இந்த ஒரு சிறு முயற்சியால உன்னோட ப்ரெண்ட் லைப் மாறிச்சுனா, நல்லது நடந்தா எல்லோருக்கும் நல்லது தானே?!" என்றார்.

கமலி தன் அம்மாவின் செல்போனை எடுத்து 10581-க்கு கால் செய்து நடந்ததை சென்னை பெருநகர போதைப் பொருள் தடுப்பு பிரிவு காவல் துறையிடம் ஒரு புகாரைப் பதிவு செய்தாள். மாணவி செய்த புகாரை காவல்துறையினர் அக்கறையுடன் ஏற்றுப் பதிவு செய்து கொண்டனர்.



பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த ணீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். (திருக்குறள். 450)



நல்லவரின் நட்பை கைவிடுவது என்பது பலரின் பகையைத் தேடுவதைக் காட்டிலும் கேடு விளைவிக்க வல்லது.


நல்ல பையன் வீரா கமலி மற்றும் மாறாவின் நட்பை விட்டுவிட்டு கெட்ட பழக்கங்கள் கொண்ட பரமனின் நட்பைப் பெரிதாக வளர்த்து வந்தான். அதன் விளைவாக வீராவிற்கு எந்த நன்மையையும் நிகழவில்லை. மாறாக போதைக்கு அடிமையாகி உடல் மற்றும் மனநலம் பாதிப்பு அடைந்தது.

# 6. சட்டத்தின் சாட்டை

கமலி தந்த தொலைபேசி புகாரின் அடிப்படையில் சென்னை பெருநகர போதைப் பொருள் தடுப்பு பிரிவு காவல் துறையினர் பள்ளியின் சுற்று வட்டாரத்தில் அடிக்கடி ரோந்து வந்தனர். சமூக விரோதிகளின் நடமாட்டத்தையும் போதை உள்ளிட்ட சமூக விரோதச் செயல்கள் ஏதேனும் நடக்கின்றனவா? என்பதையும் உடனே கண்காணிக்க தொடங்கினார்கள்.

இதெல்லாம் அறியாத போதைப் பொருள் விற்பனை செய்யும் பாண்டி, எப்போதும் போல தான் செய்யும் சமூக விரோதச் செயலான சிகரெட், கஞ்சா பவுடர் போன்ற பொருட்களை பள்ளி மாணவர்களுக்கு விற்க அங்கு வந்தான்.

பாண்டியின் நடமாட்டத்தை கண்காணித்த போலீஸார், அவனை பிடிக்க அவனை நோக்கிச் சென்றனர். போலீஸ் வருவதைத் தெரிந்து கொண்ட பாண்டி,



பின்னர் 2 நாட்கள் கழித்து பரமன் இறந்துவிட்டதாக வீராவின் கிளாஸ் மிஸ் சாரதா வகுப்பில் வருத்தச் செய்தியைப் பகிர்ந்தார். தன் நண்பன் இறந்த செய்தியை எண்ணி தனக்கும் இந்த நிலை வருமோ? என்று பயந்தான் வீரா. மன உளைச்சலுக்கு ஆளான வீரா பயத்தால் உடல் நடுங்கி பதட்டத்துடன் நேராக வீட்டை நோக்கி புறப்பட்டான்.



பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது. (திருக்குறள். 811)

நல்ல பண்பு இல்லாதவர் அன்பு நம்மை மூழ்கடிப்பது போல் தோன்றினாலும் அவர்களின் நட்பை வளர்க்காமல் குறைத்துக் கொள்வதே நல்லது.

நல்ல பண்புகள் இல்லாத பரமன், வீராவிடம் அன்பை பொழிந்து நட்பு பாராட்டினான். ஆனால் வீராவின் எதிர்கால நன்மையை கருத்தில் கொண்டால், பரமன் வீராவின் நட்பு வளர்வதை விட அழிவதே சிறந்தது.

சுதாரித்துக் கொண்டு அந்த இடத்தில் இருந்து தப்பி ஓட முயன்றான்.

அவனை ஒருவழியாக விரட்டிப் பிடித்த போலீஸ், அவனை விசாரித்து அவனின் குற்றச் செயல்களைப் பற்றி அறிந்து கொண்டனர். பின்பு அவனை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து அவன் மீது வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணையைத் துவங்கினார்கள்.

பின்னர் பள்ளி நிர்வாகத்தின் உதவியோடு மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என அனைவரிடமும் போலீஸார் விசாரணை செய்தனர். அப்போதுதான் போதைப் பழக்கத்தினால் பாதிக்கப்பட்டு உடல்நலம் சரி-யில்லாமல் பரமன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள செய்தியும் தெரிய வந்தது. அவனின் பெற்றோரை தொலைபேசியில் அவர்கள் தொடர்பு கொண்டபோது பரமனின் உடல் நிலை மிகவும் மோசமாக இருப்பதும் தெரிய வந்தது அனைவருக்கும் அதிர்ச்சியாக இருந்தது.



# 7. பெற்றோரின் அன்பு

வீரா வீட்டிற்குச் சென்றதும் அமைதியாக சோபாவில் அமர்ந்தான். அருகில் வந்த அம்மாவைப் பார்த்ததும் அவன் பதட்டமானான். "வீரா... என்னடா ஆச்சு? என்றார் அம்மா. தான் போதையின் பிடியில் இருப்பதையும் மாலா மிஸ்ஸிடம் பேசியதையும் அம்மாவிடம் சொல்ல தைரியம் இல்லாமல், சட்டென்று வீரா தன் அம்மாவின் மடியில் சாய்ந்து கதறி அழ ஆரம்பித்தான்.

என்ன நடந்ததென்றே அறியாத வீராவின் அம்மா, "என்னடா ஆச்சு வீரா... இப்போ எதுக்கு அழுற. எதுவா இருந்தாலும் அம்மாகிட்ட சொல்லு. அம்மா உனக்கு ஹெல்ப் பண்றேன்டா" என்று வீராவின் தலையைக் கோதிக் கொண்டு அன்பாக பேசினார். பள்ளியில் நடந்ததையும் மாலா மிஸ் வந்ததையும், வீராவின் நடவடிக்கைகளை கண்காணித்து அவனை தனியாக அழைத்துப் பேசியதையும் ஒன்றுவிடாமல் அம்மாவிடம் சொன்னான் வீரா.



"ஆமாடா, நீ இப்போ எல்லாம் சரியாவே பேசுறது இல்லடா. எப்போவும் ரூமுக்குள்ள தனியாவே இருக்கே. நானோ, இல்ல அப்பாவோ என்னான்னு கேட்டாலும் நீ சரியா முகம் குடுத்தும் பேசுறதில்ல. என்ன நடந்ததுன்னு சொன்னாத் தானே எங்களுக்கும் தெரியும்? இப்போ சொல்றத நீ அப்பவே சொல்லி இருக்கலாம்லடா. உன்ன சரியான பாதையில கொண்டு போகத் தான் நாங்க எல்லாம் இருக்கோம். பரவாயில்லை இனிமே எதுவா இருந்தாலும் பயப்படாம அழாமச் சொல்லுடா சரியா?" என்று தன்னம்பிக்கை ஏற்படும் விதமாக அம்மா பேசியது வீராவுக்கு ஆறுதலாக இருந்தது.

"இல்லம்மா, நான் தப்பு பண்றேன்னு எனக்கும் தெரிஞ்சுது. அதனாலதான் எல்லாரையும் விட்டு விலகியே இருந்தேன். பாமன் செத்துப் போன மாதிரி நானும் செத்துப் போவேனானு எனக்கு பயமா இருக்கும்மா. என்னால பழையபடி மாற முடியுமா?" என அழுதான் வீரா.

"உன்னால நிச்சயமா நல்லவனா மாற முடியும். நீ பழைய வீராவா மாற மனசார முடிவு பண்ணிட்ட வீரா. அதுவே நீ பாதி ஜெயிச்சிட்ட மாதிரி. ஆனா அதுகூட நீ கொஞ்சம் டாக்டர் ஆலோசனையும் எடுத்துக்கணும்டா. நான் அப்பாட்ட சொல்லி டாக்டர் அப்பாயின்மென்ட் வாங்கச் சொல்றேன். போகலாம். இன்னைக்கே டாக்டரையும் பாத்துட்டு வந்துடலாம்டா வீரா" என்று கூறி தயாரானாள் வீராவின் அம்மா.



இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர் (திருக்குறள், 623)

வரும் துன்பத்திற்கு துன்பப்படாத மன ஊக்கம் கொண்டவரே துன்பத்திற்கே துன்பம் தருபவர் ஆவார்.

தன் நண்பனுக்கு நேர்ந்த துன்பத்தை எண்ணிப் பயம் கொண்ட வீரா, தனக்கும் அப்படியொரு நிலை வந்துவிடுமோ? என்று கலங்கினான். அவன் துவண்டு போகாமல் போதைப் பழக்கத்தில் இருந்து மீண்டு வர வேண்டும் என்று போராட ஆரம்பிக்கிறான். இதுவே துன்பம் விளைவித்த போதைக்குக் கலங்காமல், பயங்கொள்ளமல் போராடி வெற்றி பெற வழிவகுக்கும்.

# 8. மருத்துவ உதவி

வீரா, வீராவின் அம்மா, அப்பா மூவரும் மருத்துவமனைக்குக் கிளம்பினார்கள். மருத்துவமனையை நெருங்கியதும், "வீரா... டாக்டர் என்ன சொல்றாங்களோ அத நல்லா கேட்டுக்கோ. அப்போதான் நீ பழைய படி நல்லா மாற முடியும்" என்று அப்பா அன்பாகக் கூறினார்.

காத்திருந்த அவர்கள் தங்கள் முறை வந்ததும் டாக்டரைச் சந்திக்க அவர் அறைக்கு மூவரும் உள்ளே சென்றார்கள்.

"குட் ஈவினிங். வாங்க சார். சொல்லுங்க." என்று வீராவின் அப்பாவிடம் டாக்டர் விசாரிக்க ஆரம்பித்தார். அவர், "என் பையன் பெயர் வீரா. ரொம்ப நல்லாப் படிக்கிற பையன். எப்படியோ போதைப் பொருளை பயன்படுத்தப் பழகிட்டான். இப்போ அதில் இருந்து வெளிய வர விரும்புறான். அதுக்கு



நீங்கதான் நல்ல சிகிச்சை தந்து உதவனும்" என்று கேட்டுக்கொண்டார். வீராவின் தாயும் டாக்டர் இவனுக்கு சீக்கிரமா நல்லது நடக்கனும்னு கேட்டுக்கொண்டாள். டாக்டர். "வீரா... நீ எதுக்கும் பயப்பட வேண்டாம். நான் சொல்றபடி செய். சீக்கிரம் நீ பழைய மாதிரி சந்தோஷமா இருக்கலாம்" என்று சொன்னார். அவரிடம் நடந்த விஷயங்களைக் கேட்டுக் கொண்டார். டாக்டர் வீராவுக்கு தன்னம்பிக்கையூட்டும் அறிவுரைக் கொடுத்தார்.

"நீ தனியா இருக்கும் போது போதைப் பொருள் நினைப்பு வந்தா உடனே நீ உன் பிரண்ட்ஸ் கூட இருக்கனும். இல்லனா அம்பா அப்பா கூட இருக்கனும். இல்லனா புத்தகங்கள் படிச்சி டைம் ஸ்பெண்ட் பண்ணு. தனியா மட்டும் இருக்காதே..! இப்படி செய்யறது தொடக்கத்துல கொஞ்சம் கஷ்டமா தான் இருக்கும். ஆனா நான் தரப்போற மருந்து ப்ளஸ் இதெல்லாமும் சேர்ந்துதான் உன்னை முழுசா குணப்படுத்தும்" என்று உண்மையை எடுத்துக் கூறினார் டாக்டர். சில மருந்துகளை எழுதி கொடுத்து, வீராவைக் கொஞ்ச நேரம் வெளியில் இருக்கும்படி கூறி அனுப்பி வைத்தார் டாக்டர்.

வீரா வெளியில் போனதும் அவனின் அம்மா அப்பாவிடம், "உங்க பையன் யார்கூட தினமும் பேசுறான். அவனின் தினசரி நடவடிக்கைகள் என்னென்ன? ஸ்கூல் முடிஞ்சி சரியான நேரத்திற்கு வீட்டிற்கு வாரானா? நல்லா படிக்கிறானா?" என்று டாக்டர் கேட்டார். "இப்போ எல்லாம் நேரத்துக்குத் தூங்குறது இல்லை. போன பரிச்சையில கூட மார்க் ரொம்பக் கம்மியா தான் எடுத்தான். சரியா கூடப் பேசுறது இல்ல. ஆனால் நாங்க அவன் போதைக்கு அடிமையாவான்னு எதிர்பாக்கவே இல்லை" என்று சொல்லி இருவரும் கண்கலங்கினர்.

அவர்களிடம் டாக்டர் "இப்போவும் எதுவும் கெட்டுபோகல. நீங்க சரியான வழியத்தான் தேர்ந்தெடுத்து இருக்கீங்க. உளவியல் ரீதியான உதவி மட்டும் கொடுக்காமல் இப்ப மருத்துவ உதவியும் உங்க பையனுக்கு ரொம்ப அவசியம். இந்த இரண்டையும் தாண்டி, உங்கள் பிள்ளையுடன் தினமும் கொஞ்ச நேரம் பேசி செலவிடுங்க. உங்க பிள்ளைக்கு சில குடும்பப் பொறுப்புகளை குடுங்க. உங்கள் அக்கம் பக்கம் இருக்கும் நண்பர்கள், சொந்த பந்தங்களுடன் பேசி வீரா உறவாட சந்தர்ப்பங்களையும் உருவாக்குங்க. உலகத்துல இருக்கும் நல்ல விஷயங்களில், செயல்களில் கிடைக்கும் இன்பத்தை அவன் உணர கற்றுக்கொடுங்க. அவன் மனநிலையை தெரிஞ்சு வச்சுக்கங்க. அவனின் தினசரி நடவடிக்கைகளைப் பற்றி பேசுங்க.

உங்க பையன் யார்கூட அதிக நேரம் செலவிடுறான்? இன்டர்நெட்ல என்னென்ன சேவைகளைப் பயன்படுத்துறான்? அவனின் படிப்பு மற்றும் பிற செயல்களில் ஏதாவது கற்றலில் மாற்றங்கள் இருக்கா? அவன் உடல்நிலை மற்றும் பிற நடவடிக்கைகளில் ஏதாவது மாறுதல்கள் இருக்கிறதா? என்பதைக் கண்காணிக்க வேண்டியது உங்க கடமை. நீங்க விஷயம் தெரிஞ்சதும் கோபப்படாம ஆரம்ப காலத்துலேயே வீராவை சிகிச்சைக்குக் கூட்டிட்டு வந்ததே சரியான செயல்" என்று கூறி அவர்களை அனுப்பிவைத்தார் டாக்டர்.

தொடர்ந்து சில மாதங்கள் வீராவிற்கு உளவியல் மற்றும் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டதால் போதைப் பழக்கத்தில் இருந்து வீரா மீண்டு வந்தான்



நோய்நாடி நோய்முதல்நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். (திருக்குறள். 948)


நோயாளியின் நோய் என்ன? நோய்க்கான காரணம் என்ன? அதை தீர்க்க வழி என்ன? என்பதை ஆய்வு செய்து மருத்துவர் செயல்பட வேண்டும்.

வீராவின் உடல், மனநல பாதிப்புகளை இன்னதென்று ஆராய்ந்து, அவற்றின் காரணம் ஆராய்ந்து, அதைத் தணிக்கும் வழியையும் ஆராய்ந்து, அவன் உடலுக்கும் மனதிற்கும் பொருந்தும் படியாக மருத்துவம் மற்றும் உளவியல் ரீதியான உதவிகளை செய்த மருத்துவர் பாராட்டத்தக்கவர்.

# 9. முயற்சி திருவினையாக்கும்

இதெல்லாம் நடந்த பின் அனைவரும் பாராட்டும் வகையில் நல்ல மாணவனாக மட்டும் இல்லாமல் கலை மற்றும் விளையாட்டு துறைகளிலும் சிறந்து விளங்கினான் வீரா.

வகுப்பில் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்ற மாணவர்களில் வீராவும் ஒருவனாக இருந்தான். அன்று நடைபெற்ற பெற்றோர்- ஆசிரியர் சந்திப்புக் கூட்டத்தில், அங்கு வந்திருந்த மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் 'போதைப் பழக்கத்தில் இருந்து காக்க நாம் அனைவரும் என்ன செய்ய வேண்டும்?' என வீரா விழிப்புணர்வு சொற்பொழிவும் வழங்கினான். இதனைக் கண்ட மாலா மிஸ், நண்பர்கள் மற்றும் அவனது பெற்றோருக்கு மிகவும் பெருமை.



அவனுக்கு கரவொலி எழுப்பிப் பாராட்டினை வெளிப்படுத்தினார்கள். இறுதியாக அனைவரும் சேர்ந்து, கீழ்கண்டவாறு சில உறுதிமொழிகளை எடுத்துக் கொண்டனர்.


1. போதைப் பொருட்களை தவிர்த்திடுவேன். போதைப் பொருள் இல்லா வாழ்க்கையையே விரும்புவேன்.
2. நான் போதைப் பழக்கத்திற்கு ஒருபோதும் அடிமையாக மாட்டேன்.
3. போதைப் பழக்கத்தில் இருந்து என்னையும் என்னை சுற்றியுள்ளவர்களையும் காப்பாற்ற எப்போதும் விழிப்புணர்வுடனும், பொறுப்புடனும் செயல்படுவேன்.
4. நான் உடல் மற்றும் மன நலத்திற்கு கேடு விளைவிக்கும் போதை உலகத்திற்கு ஒருபோதும் செல்ல மாட்டேன்.
5. நாம் சமுதாயத்தில் நடக்கும் ஒவ்வொரு நன்மை தீமைகளுக்கு பொறுப்பேற்க கடமைப்பட்டவர்கள். எனவே, நம்மைச் சுற்றி நடக்கும் சமூக விரோத செயல்களுக்கு எதிராக எப்போதும் குரல் கொடுக்க வேண்டும்.
6. சமூக விரோதிகளைக் கண்டு ஒருபோதும் அஞ்சாமல் துணிவுடன் காவல் துறையினருக்குத் தகவல் தருவோம்.
7. எப்போதும் நல்ல எண்ணங்கள் மற்றும் பண்புகளைப் பின்பற்றி கல்வி மற்றும் கலைகள் பல கற்று, வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்ப்போம்.




சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். (திருக்குறள். 664)

ஒரு செயலைச் செய்வேன் என்று சொல்வது எளிய ஒன்று. ஆனால் சொல்லிய வண்ணம் அச்செயலை செய்து முடிப்பது அரிய ஒன்றாகும்.


வீரா தன் போதைப் பழக்கத்தில் இருந்து விடுபட பெரிதும் முயன்றான். அவன் சொன்னவாறே அதிலிருந்து மீண்டு வந்து அனைவருக்கும் எடுத்துக்காட்டாக வாழ்கிறான். இது கட்டுப்பாடு இன்றி வாழும் எவராலும் எளிதாகச் செய்ய முடியாத அரிதான செயலாகும்.


ஒருவருக்கு போதையின் பாதை எப்படித் தொடங்குகிறது?
வெளிப்புற / சமூக காரணங்கள்
தனிப்பட்ட காரணங்கள்
நண்பர்களின் நடத்தையின் தாக்கம்
மன அழுத்தம் மற்றும் பதட்டம்
வாழ்வில் சலிப்பு
போதைப்பொருட்கள் பற்றிய ஆர்வம்
போதைப் பழக்கத்தின் அறிகுறிகள்
உடல் சார்ந்த அறிகுறிகள்
நடத்தை அறிகுறிகள்
பொறுப்பற்ற நடத்தை
வாதாடுபவராக மாறுதல்
தனிமையை நாடுதல்
பொய் கூறுதல்
பேச்சு மாற்றங்கள்- விரைவான, மெதுவாக, மந்தமானவை


போதைப் பழக்கத்தினால் சமூகம் மற்றும் தனிநபர் சந்திக்கும் சீர்கேடுகள்
சமூக விளைவுகள்
பிரிந்த குடும்பங்கள்
புகழ் இழப்பு
ஒத்த குழுவினரின் அழுத்தம்
சமூக இழிவு
பள்ளி இடைநிற்றல்
சட்ட விளைவுகள்
சாலை விபத்துகள்
வன்முறைகள்
குற்றங்கள்
ஆக்கிரமிப்பு மற்றும் வன்முறை
கிளர்ச்சி மற்றும் தேசிய எதிர்ப்பு நடவடிக்கைகள்
கைது, சிறைவாசம்
ஆரோக்கிய சீர்கேடுகள்
பொருளாதார விளைவுகள்
உளவியல் விளைவுகள்

## முடிவுரை

# எதிர்கால நோக்கமும் தீர்வும்








சமூகத்தில் போதைப் பொருட்களை அறவே ஒழிப்பதும், போதைப் பழக்கத்தில் இருந்து விலகி இருப்பதும் நாட்டிற்கும் வீட்டிற்கும், நம் ஒவ்வொருவரின் எதிர்காலத்திற்கும் நன்மை பயக்கும் செயல் ஆகும்.

'போதை எப்போதும் அழிவின் பாதை' எனும் மந்திரத்தை அறிந்து செயல்படுவோம். வாழ்வில் சிறந்த ஒழுக்கத்தோடு வாழ்ந்திடுவோம். உடல்நலம் மனநலம் காப்போம்!

## போதை பழக்கம் எனக்கு வேண்டாம் நமக்கு வேண்டாம்

அவசர எண் : 10581

புகார்களுக்கு : 9498410581

முகவரி : டிஜிபி அலுவலகம்,
டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை,
மயிலாப்பூர், சென்னை 600 004

மின்னஞ்சல் முகவரி : spnibcid@gmail.com

CHILD HELPLINE : 1098
POLICE: 100
FIRE : 101
AMBULANCE: 102, 108
STUDENT & EXAM HELPLINE : 14417

Twitter : @drugfreetn
Facebook : Drive Against Drugs -DND
Insta : enforcementbureautn



கையறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்

கருத்தாக்கம்
முனைவர் இரா. கீதா | முனைவர் ம. உஷா ராணி

நூல் வடிவமைப்பு
'அலை' கலைக்கூடம்

கலை
@Sunny arts

GREATER CHENNAI POLICE
TAMIL NADU